# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – 636 011

பட்ட வகுப்பு – கலையியல், அறிவியல்

முதலாமாண்டு

**இரண்டாம்** பருவம்

## செய்யுள் திரட்டு

**2021–2022 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெறும்**

மாணவர்களுக்குரியது

**முதலாமாண்டு**

**இரண்டாம் பருவம்**

**பாடம்: இடைக்கால இலக்கியங்களும் சிறுகதையும்**


| **வ.எண்** | **தலைப்பு** | **பக்க எண்** |
|---|---|---|
| | **அலகு - 1 சமய இலக்கியங்கள்** | |
| 1. | தேவாரம் - இரண்டாம் திருமுறை - பொது கோளறு பதிகம் “வேயுறு தோளிபங்கன் எனத் தொடங்கும் பாடல் - திருஞான சம்பந்தர் | |
| 2. | திருப்பாவை – ஆண்டாள் (11 - 20) | |
| 3. | திருமந்திரம் - – திருமூலர் - இளமை நிலையாமை (10 - பாடல்கள்) | |
| 4. | இராமலிங்க அடிகள் - திருவருட்பா (முதல் திருமுறை சென்னைக் கந்த கோட்டம்) – (1,6,7,8, 9,) 5 பாடல்கள் | |
| 5. | குணங்குடி மஸ்தான் சாகிபு - பராபரக்கண்ணி (1 - 10 பாடல்கள்) | |
| 6. | கண்ணதாசன் - இயேசு காவியம் - பாரச்சிலுவை (8 - பாடல்கள்) | |

| அலகு - 2 சிற்றிலக்கியங்கள் | | |
|---|---|---|
| 1. | முத்தொள்ளாயிரம் - சேரன் 10,11,12 பாடல்கள்<br>சோழன் - 25, 26, 27. பாண்டியன் - 51, 52, 53. | |
| 2. | நந்திக்கலம்பகம் - 23, 61, 64, 68 (4 பாடல்கள்) | |
| 3. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - அம்புலிப் பருவம் (1 - 5) பாடல்கள் | |
| 4. | அழகர்கிள்ளை விடு தூது - (1 - 15 கண்ணிகள்) | |
| 5. | கலிங்கத்துப்பரணி - பேய் முறைப்பாடு (213 - 232) | |
| 6. | அபிராமி அந்தாதி - (1 - 5 பாடல்கள்) | |

## அ. தேவாரம் - திருஞானசம்பந்தர்

### திருஞானசம்பந்தர் - தேவாரம்
### திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 1

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 2

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசை தெய்வம் ஆன பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 3

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர் கொடுநோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னலும் மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 5

வாள்வரிய தளதாடை வரிகோவணத்தர் மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல் கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 6

செப்பிள முலைநன்மங்கை ஒருபாகமாக விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 7

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலும் மறையொடு தேவர் வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே - 10

தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல்துன்னி வளர்செம்பொன்
- எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே -11

## ஆ. திருப்பாவை - ஆண்டாள்

### திருப்பாவை

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய் - 1

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீவாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய் - 2

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைபாடிப் போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய் - 3

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய் - 4

எல்லே இளங்கிளியெ இன்னும் உறங்குதியொ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடெலோ ரெம்பாவாய் - 5

நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய
கோயில்காப் பானே கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்ன முன்னம் மாற்றாதே அம்மா நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய் - 6

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே உறங்கா தெழுந்திராய்
சொம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய் - 7

உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் - 8

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்தவ மன்று தகவேலோ ரெம்பாவாய் - 9

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய் - 10

---

## இ. திருமந்திரம் - திருமூலர்
## இளமை நிலையாமை

1. கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
   விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்
   குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
   விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே

2. ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
   பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
   நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
   தூண்டு விளக்கின் சுடரறி யாரே

3. தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
   ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
   பாய்ந்தற்ற கங்கைப் படர்சடைந ந்தியை
   ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே

4. விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
   கரும்பு தகர்த்துக் கடைக் கொண்ட நீர்போல்
   அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குங்
   கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே

5. பாலன் இளையன் விருத்தன் என நின்ற
   காலங் கழிவன கண்டும் அறிகிலார்
   ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
   மேலுங் கிடந்து விரும்புவன் நானே

6. காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்
சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே

7. பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே

8. கண்ணதுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே

9. ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருங்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வார் திகைப்பொழி யாரே

10. எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இளமையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்து கண்டேனே

---

## ஈ. திருவருட்பா - இராமலிங்க அடிகள்

## முதல் திருமுறை - சென்னைக் கந்த கோட்டம்

1. திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்
திறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க வறிவோங்கி நிறைவான வின்பந்
திகழ்ந் தோங்க அருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி யானந்த
வடிவாகி யோங்க ஞான
உருவோங்கு முணர்வினிறை யொளியோங்கி யோங்குமயில்
ஊர்ந்தோங்கி யெவ்வுயிர்க்கும்
உறவோங்கு நின்பதமென் னுளமோங்கி வளமோங்க
உய்கின்ற நாளெந்த நாள்
தருவோங்கு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

2. காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம் இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனைஉ வந்த மெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே
தாமம்ஒளிர் சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகர் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

3. நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்
நீக்கும்அறி வாம் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

4. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்

பிடியா திருக்க வேண்டும்

மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை

மறவா திருக்கவேண்டும்

மணிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற

வாழ்வில்நான் வாழ வேண்டும்

தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்

தலம்ஓங்கு கந்த வேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி

சண்முகத் தெய்வமணியே!

5. ஈஎன்று நான் ஒருவர் இடம்நின்று கேளாத

இயல்பும் என்னிடம் ஒருவர் ஈ

திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்

இடுகின்ற திறமும் இறையாம்

நீ என்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள

நினைவிடாத நெறியும் அயலார்

நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று

நெகிழாத திடமும் உலகில்

சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர் தமைத்

தீங்குசொல் லாத தெளிவும்

திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்

திருவடிக் காளாக்குவாய்

தாய்ஒன்று சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்

தலம்ஓங்கு கந்த வேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி

சண்முகத் தெய்வமணியே!

---

**உ. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்**

**- குணங்குடி மஸ்தான் சாகிபு**

**பராபரக்கண்ணி**

1. அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான்
   கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே

2. ஆதியாய் ஆண்டவனாய் அஃததுவாய் நின்றபெருஞ்
   சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே

3. வேத மறைப்பொருளை வேதாந்தத்து உட்கருவை
   ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே.

4. அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக்
   கொண்டாடும் மெஞ்ஞானக் கூத்தே பராபரமே

5. நாவாற்புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்
   பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே!

6. பேராற் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு
   ஆரா ரிருந்தும்பலன் ஆமோ பராபரமே

7. மாறாய நற்கருணை மாவருள்சித் தித்திடவே
பாராயோ ஐயா பகராய் பராபரமே

8. ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்
தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே

9. நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்
மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே

10. உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக்
கடலுமலை யும்திரிந்தும் காணேன் பராபரமே.

---

**ஊ. இயேசு காவியம் - கண்ணதாசன்**

**பாரச் சிலுவை .**

தொட்டதெல்லாம் பொன்னாகும் வள்ளலிடம் சென்று ஒரு
தொழுநோய்க் காரன்
விட்டெறிந்த பணம்போல இயேசுபிரான் கைகளிலே
வீர ரெல்லாம்
எட்டுப்பேர் சுமக்கின்ற பெருஞ்சிலுவை தனையாங்கே
எடுத்து வைத்தார்!
கட்டளைபோல் பெருவானம் கலக்கமுற ஓர்மின்னல்
கண்ட தம்மா! - 1

நல்லவர்க்கு மழைபொழியும் நாய்களெனில் நிலங்காயும்
நன்மை இல்லாக்
கல்மனத்தர் நடந்து சென்றால் முள்ளாக மாறிவிடும்
கடலின் பஞ்சும்!
சொல்லறியா இயேசுபிரான் தோள்களிலே சிலுவையினைச்
சுமந்த போது
கொல்லவரும் பாம்புகளும் புலிகளும் பெருங்கண்ணீர்
கொட்டிற் றம்மா! - 2

வானகமும் வையகமும் கூடுவதைக் குறிப்பதுபோல்
சிலுவை வைத்து
மானமெனும் ஓர்பண்பை மனிதகுலம் காண்பதற்கு
மனது வைத்துத்
தானமொடும் தவம்பெருக முள்ளாலே மகுடமதைத்
தலையில் வைத்து
ஞானமகன் நின்றவுடன் ஞாலமெலாம் ஓர்பொழுது
நடுங்கிற் றம்மா! - 3

அவமானம் மிக்கவர்கள் அவர்மானம் தனைப்பறிக்க
அவரின் தோளில்
அவமானச் சின்னமதை அணைத்தேற்றி வைத்தார்கள்
ஆன போதும்
புவிமானம் காப்பதற்குச் சிலுவைதனை முத்தமிட்டுப்
புனித அண்ணல்
உவமான மாகவரும் எதிர்காலந் தனைஎண்ணி
உடன்சு மந்தார்! - 4

எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் தன்தோளில்
ஏற்றுக் கொள்ள
உத்தமனார் சிலுவையினை உடல்வைத்து அதன்மீது
உள்ளம் வைத்தார்!
கத்திமுனை பின்தொடரப் புத்தியுள்ளோர் கண்கலங்கக்
கால் நடந்து

சத்தியத்தின் திருக்குமரன் தள்ளாடும் உடலோடும்
தவழ்ந்து சென்றார்! - 5

ஊனுடலம் தள்ளாட உதிரமெலாம் ஆறாக
உலக நாதன்
வானுமிழும் மழைபோலத் தேகமெலாம் வியர்வைவர
மண்ணில் வீழ்வார்!
ஆனவரை சாட்டையடி கொடுப்பார்கள் மறுபடியும்
ஐயன் நிற்பார்!
வானவரின் திருக்குமரன் முகங்காண மாந்தரெல்லாம்
வந்தார் ஆங்கே! - 6

தலையினிலே முள்வலியும் தாளாத உள்வலியும்
தாக்கி னாலும்
நிலையினிலே குன்றாமல் நெடுஞ்சிலுவை சுமந்தபடி
தேவ நேயன்
அலைஅலையாய் வருவோர்முன் அசைந்தாடி நடக்கின்றார்
அதனைப் பார்த்து
நிலைகுலையா வஞ்சகரும் உதிரத்தால் அழுதனரே
நெஞ்சம் வேர்த்து! - 7

வேதமகன் தாளாமல் பூமியிலே மூன்றுமுறை
வீழ்ந்து வீழ்ந்து
சோதனையைப் பொறுத்தாலும் சுமக்கும்உடல் பொறுக்கவில்லை
சோர்ந்து சோர்ந்து
நாதனையே மனத்தெண்ணி நாட்டாரைக் காப்பாற்ற
நடந்து சென்றார்
போதனையைச் சொன்னவர்க்கு வேதனையும் சோதனையும்
பொறுமை தானே! - 8

---

## அலகு - 2: சிற்றிலக்கியங்கள்

### அ. முத்தொள்ளாயிரம்

### 1. சேரன்

இவன்என் நலங்கவர்ந்தகள்வன் இவன்எனது
நெஞ்சம்நிறையழித்தகள்வனென்று - அஞ்சொலாய்
செல்லுநெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோபெரிது

காராட்டுதிரம்தூய் அன்னைகளன் இழைத்து
நீராட்டிநீங்கென்றால் நீங்குமோ - போராட்டு
வென்றுகளங்கொண்டவெஞ்சினவேற் கோதைக்கென்
நெஞ்சங் களங்கொண்டநோய்

மல்லல்நீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவேவேண்டும் நம்குறை - நல்ல
திலகங் கிடந்ததிருநுதலாய் அஃதால்
உலகங் கிடந்த இயல்பு

## 2. சோழன்

குதலைப் பருவத்தே கோழிக் கோமானை
வதுவை பெறு கென்றாள் அன்னை - அதுபோய்
விளைந்தவா இன்று வியன் கானல் வெண்தேர்த்
துளங்கு நீா் மாமருட்டி அற்று.

சுடர் இலைவேல் சோழன் தன்பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத் - தொடர்புடைய
நீர் வலையில் கயல்போலப் பிறழுமே
சாலேக வாயில் தொறும் கண். -

அன்னையும் கோல் கொண்டு அலைக்கும் அயலாரும்
என்னை அழியும் சொல்ச் சொல்லுவா் - உள்நிலைய
தெங்குஉண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
திண்தோ் வளவன் திறத்து.

## 3. பாண்டியன்

காப்படங்கு என்று அன்னை கடிமனை இல்செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின் மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம் துளை இட்டார்க்கு
என்னைகொல் கைம்மாறு இனி.

வளையவாய் நீண்டதோள் வாட்கணாய் அன்னை
இளையவளாய் மூத்திலள் கொல்லோ- தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

கோட்டெங்கு சூழ்கூடல் கோமானைக் கூடவென
வேட்டங்குச் சென்றவள் னெஞ்சறியாள்- கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல் கொண்டாள்.

## ஆ. நந்திக்கலம்பகம்

### கண்டோர் கூற்று

### இணைக்குறள் ஆசிரியப்பா

உரைவரம் பிகந்த உயர்புகழ்ப் பல்லவன்

அரசர் கோமான் அடுபோர் நந்தி

மாவெள் ளாற்றுமேவலர்க் கடந்த

செருவேலுயர்வுபாடினன் கொல்லோ

நெருநல் துணியரைச் சுற்றிப்

பரடுதிறப்பத் தன்னால் பல்கடைத்

திரிந்தபாணன் நறுந்தார் பெற்றுக்

காஅர் தளிர்த்தகானக் கொன்றையின்

புதுப்பூப் பொலன் கலன் அணிந்து

விளங்கொளிஆனனன் இப்போது

இளங்களியானைஎருத்தமிசையன்னே

### பாட்டுடைத் தலைவன் வீரச் சிறப்பு

### இணைக்குறள் ஆசிரியப்பா

திருவின் செம்மையும் நிலமகள் உரிமையும்

பொதுவின்றிஆண்டபொலம்பூண் பல்லவ

தோள் துணை ஆக மாவெள் ளாற்று

மேவலர்க் கடந்தஅண்ணால் நந்திநின்

திருவருநெடுங்கண் சிவக்கும் ஆகின்

செருநர் சேரும் பதிசிவக் கும்மே

நிறங்கிளர் புருவம் துடிக்கின் நின்கழல்

இறைஞ்சாமன்னர்க் கிடந்துடிக் கும்மே

மையில் வாளுறைகழிக்குமாகின்

அடங்கார் பெண்டிர்

பூண்முலைமுத்தப் பூண்கழிக்கும்மே

கடுவாய் போல்வளைஅதிரநின்னொடு

மருவாமன்னர் மனம் துடிக் கும்மே

மாமதயானைபண்ணின்

உதிரமன்னுநின் எதிர்மலைந் தோர்க்கே

### சம்பிரதம்

### எண்சீர்க் கழிநெடிலடிஆசிரியவிருத்தம்

வட்டன்றேநீர்இதனைமிகவும் காண்மின்

மற்றைக்கைகொட்டினேன் மாவின்வித்தொன்று

இட்டன்றேபழம்பழுப்பித் துண்ணக் காண்மின்

இவையல்லசம்பிரதம் இகலில் தெள்ளாற்று

அட்டன்றேபொன்றும் வகைமுனிந்தநந்தி

அவனிநாராயணன்பாராளுங் கோமான்

குட்டன்றேமழைநீரைக் குடங்கைகொண்டு

குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின்றேனே.

**மன்னன் வீரத்தைப் படைவீரன் பகர்தல்**

**எழுசீர்க் கழிநெடிலடிஆசிரியவிருத்தம்**

திறையிடுமின் அன்றிமதில்விடுமின் நுங்கள்

செருவொழியவெங்கண் முரசம்

அறைவிடுமின் இந்தஅவனிதனில் எங்கும்

அவனுடையதொண்டைஅரசே

நிறைவிடுமின் நந்திகழல்புகுமின் உங்கள்

நெடுமுடிகள் வந்துநிகழத்

துறைவிடுமின் அன்றிஉறைபதியகன்று

தொழுமின்அலதுய்தல் அரிதே.

---

**இ.முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்**
**அம்புலிப்பருவம் (1-5பாடல்கள்)**

**அம்புலிப் பருவம்**

மண்டலம் போற்றுருவம் அமுதமய மாய்முழு

மதிக்கடவு ளெனவருதலால்

வானாறு தலைமடுக் கப்பொங்கும் ஆனந்த

மாக்கடல் இடைத்தோன்றலால்

தண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்விள் ளக்கரத்

தாமரை முகிழ்த்திடுதலால்

சகலபுவ னத்திலும் உயிர்ப்பயிர் தழைப்பநல்

தண்ணளி சுரந்திடுதலால்

துண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பரஞ்

சோதிகட் பொறியாதலால்

தோன்றலின்வன் நின்னையொத் துளனால் நினக்குமொரு

துணையிவன் போலில்லைகாண்

அண்டரண் டத்தொடகி லாண்டம் படைத்தவனோ

டம்புலீ ஆடவாவே

அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்

அம்புலீ ஆடவாவே. - 1

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்

தோகைமேல் கொண்டருளினாய்
தோற்றிமுன் பொங்கிமலை போலஅலை மோதுமச்
சோதிவே லையுமுகந்தாய்
குற்றமில் குணத்தைக் குறித்தஇர வலர்முகம்
கோடா தளித்தல் செய்தாய்
கோகன நாயகன் வரக்கூ விடுங்குக்
குடப்பெரிய தாகவைத்தாய்
உற்றிடும் இதழ்க்குமுதம் விண்டுதண் தேனொழுக
ஒளிநிலா நகைமுகிழ்த்தாய்
உன்செய்கை யெம்பிரான் தன்செய்கை போலுமால்
உனையுமிவ னொவ்வாதிரான்
பொதி களத்தவன் அழித்தகும ரேசனுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. - 2
கங்கைமுடி யடிகட்கோர் கண்ணா யிருத்தியக்
கண்ணினுள் மணியிவன்காண்
கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
கலைமுழுதும் நிறையநின்றான்
எங்குமிர வோனெனத் திரிதியிவன் அடியவர்
எவர்க்கும்இர வினையொழித்தான்
இருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவன்
எவ்வுயிரும் வாழச்செய்தான்
பொங்கமுதம் அமுதா சனர்க்குதவி னாயிவன்
புத்திமுத் தியுமளித்தான்
புவனம் படைத்த இவன் நின்னின் மிக்கானெனப்
புகல்வதோர் பொருளன்றுகாண்
அங்கண்மறை யோலிட் டரற்றநின் றவனுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுபொலி கந்தபுரி தலையவரு கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. - 3
பாயிருட் போதத் திருட்டன்றி அகவிருட்
படலங் கிழிப்பதுணராய்
பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப்
பரப்பெல்லாம் பொலிவதோராய்
சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாலுளத்
திருமலர் திறக்க அறியாய்
சிறைவிரி சகோரப்பு ளன்றியெவ் வுயிரும்
திளைத்தின்பம் ஆரச்செயாய்
நீயிவற் கொப்பன்மை செப்புவதென் இப்பரிசில்

நின்பெருந் தவமென்சொல்கேன்

நெடியவன் முதல்தேவர் குறுகிநிற் பவுமுனை

நினைத்தழைத் தருளினன் காண்

ஆயிர மறைக்கமொரு பொருளா யிருப்பவனொ

அம்புலீ ஆடவாவே

அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்

அம்புலீ ஆடவாவே. – 4

தருமன்னு பொன்னுலகும் மண்ணுலகு மொக்கத்

தலைத்தலை மயங்கத்தொகும்

சந்நிதி யடைந்தவர்கள் பையுள்நோய் முற்றும்

தவிர்ந்தக மகிழ்ந்துதவிராக்

கருமன்னும் ஊழிப் பெரும்பிணியு மாற்றிடுதல்

கண்டனை இருத்தியால்நின்

கயரோக முடன்முயற் கறையுந் துடைத்திடக்

கருதிடுதி யேலெம்பிரான்

திருமுன்னர் அள்ளியிடு வெண்சாந்தும் மற்றைத்

திருச்சாந்தும் நிற்கவற்றாச்

சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந்

திவலையொன் றேஅமையுமால்

அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவனோ

அம்புலீ ஆடவாவே

அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்

அம்புலீ ஆடவாவே. - 5

---

### ஈ. அழகர்கிள்ளை விடு தூது –(1-15கண்ணிகள்)

**- பலபட்டரைச் சொக்கநாதப் புலவர்.**

**காப்பு - வெண்பா**

தெள்ளு தமிழழகர் சீபதிவாழ் வார்மீது

கிள்ளைவிடு தூது கிளத்தவே – பிள்ளைக்

குருகூரத் தானேசங் கூர்கமுகி லேறும்

குருகூரத் தானே சங் கூர்.

**கண்ணிகள்:**

கார்கொண்ட மேனிக் கடவுள் பெயர் கொண்டு

நீர்கொண்ட பாயல் நிறங்கொண்டு – சீர்கொண்ட **–1**

வையம் படைக்கு மதனையுமேற் கொண்டின்பம்

செய்யுங் கிளியரசே செப்பக்கேள் - வையமெலாம் **-2**

வேளாண்மை யென்னும் விளைவுக்கு நின்வார்த்தை

கேளா தவர் ஆர்காண் கிள்ளையே – நாளும் **-3**

மலைத்திடு மாரனொற்றை வண்டிலும் இல் லாமற்

செலுத்தியகாற் றேரைமுழுத் தேராய்ப் - பெலத்திழுத்துக் -4

கொண்டு திரி பச்சைக் குதிராய் உனக்கெதிரோ

பண்டு திரி வெய்யோன் பரியேழும் - கண்ட -5

செகமுழுதும் நீஞான தீபமும் நீ யென்று

சுகமுனியே சொல்லாரோ சொல்லாய் - வகைவகையாய் -6

எவ்வண்ண மாய்ப் பறக்கும் எப்பறவை யாயினும் உன்

ஐவண்ணத் துள்ளே யடங்குமே – மெய்வண்ணம் -7

பார்க்கும் பொழுதிலுனைப் பார்ப்பதியென் பாரென்றோ

மூக்குச் சிவந்தாய் மொழிந்திடாய் - நாக்குத் -8

தடுமாறு வோரையெல்லாந் தள்ளுவரே யுன்னை

விடுவார் ஒருவருண்டோ விள்ளாய் - அடுபோர் -9

மறந்தரு சீவகனார் மங்கையரில் தத்தை

சிறந்ததுநின் பேர்படைத்த சீரே – பிறந்தவர் -10

ஆரும் பறவைகளுக் கச்சுதன்பே ருஞ்சிவன்றன்

பேரும் பகர்ந்தாற் பிழையன்றோ – நேர்பெறுவி -11

வேகி யொருகூடு விட்டுமாறு கூடடையும்

யோகி யுனக்குவமை யுண்டோகாண் - நீகீரம் -12

ஆகையா லாடை யுனக்குண்டே பாடகமும்

நீ கொள்வாய் காலாழி நீங்காயே – ஏகாத -13

கற்புடையாய் நீயென்றாற் காமனையுஞ் சேர்வாயே

அற்புடைய பெண்கொடி நீ ஆகாயோ – பொற்புடையோர் -14

துன்னியசா யுச்யஞ் சுகரூபம் ஆகையால்

அன்னது நின்சொரூபம் அல்லவோ – வன்னி -15

## உ. கலிங்கத்துப்பரணி (பேய் முறைப்பாடு – 213 - 232) - ஜெயங்கொண்டார்

**பேய்களாகப் பிறந்து கெட்டோம்**

ஆறுடைய திருமுடியான் அருளுடைய
பெருந்தேவி! அபயன் காக்கும்
பேருடையை பூதமாய் பிறவாமல்,
பேய்களாகப் பிறந்து கெட்டோம்!

**எங்களை யார் காப்பார்?**

ஆர்காப்பார், எங்களை நீ அறிந்து அருளிக்
காப்பதல்லால்? அடையப் பாழாம்
ஊர்காக்க மதில் வேண்டா : உயிர் காத்த
உடம்பினை விட்டு, ஓடிப் போதும்!

**பிழைக்க மாட்டோம்:**

ஓய்கின்றோம்! ஓய்வுக்கும் இனி ஆற்றோம்!
ஒருநாளைக்கு ஒருநாள் நாங்கள்
தேய்கின்றபடி தேய்ந்து, மிடுக்கு அற்றோம்!
செற்றாலும் உய்ய மாட்டோம்!

**ஆசை போதும்:**

வேகைக்கு விறகு ஆனோம், மெலியா நின்றோம்!
மெலிந்த உடல் தடிப்பதற்கு, விரகும் காணோம்!
சாகைக்கு இத்தனை ஆசை போதும்; பாழிற்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்!

**பசிக்கு ஒன்றும் இல்லேம்!**

'சாவத்தான் பெறுதுமோ – சதுமுகன்தான்,
கீழ் நாங்கள் மேனாள் செய்த
பாவத்தால், எம் வயிற்றில் பசியை வைத்தான் ;
பாவியேம் பசிக்கு ஒன்று இல்லேம்!

**மூளி வாய் ஆனோம்!**

பதடிகளாய்க் காற்று, அடிப்ப, நிலை நிலாமல்
பறக்கின்றோம், பசிக்கு அலந்து, பாதி நாக்கும்
உதடுகளில் பாதியும் தின்று ஒறுவாய் ஆனேம் ;
உனக்கு அடிமை; அடியேமை உய்யப் பாராய் ;

**நெற்றாகி யுள்ளோம்:**

அகளங்கள் நமக்கு இரங்கான், அசரர் இடும்
திறைக்கு அருள்வான் ; அவன்தன் யானை
நிகளம் பூண்டன, அடியேம் நெடும் பசியால்
அற உலர்ந்து, நெற்றாய் அற்றேம்!

**நற்குறியால் பொறுத்துள்ளோம்**

மூக்கு அருகே வழு நாறி, முடை நாறி

உதடுகளும் துடிப்ப, வாயை
ஈக் கதுவும் குறியால், உய்ந்து இருக்கின்றோம் ;
அன்றாகில், இன்றே சாதும்!

**முது பேய் வருகை**

என்று பல கூளிகள்
இரைத்து உரைசெய் போதத்து,
அன்று, இமய வெற்பினிடை
நின்று வரும் அப் பேய்.

**முதுபேய் வணங்கிக் கூறல்:**

கைதொழுது இறைஞ்சி
அடியேன் வடகலிங்கத்து
எய்திய இடத்து உள
நிமித்தம் இவை கேண்மோ் ;

**தீய சகுனங்கள்:**

மதக்கரி மருப்புஇற மதம் புலரு மாலோ,
மடப்பிடி மருப்பு எழ மதம் பொழிய மாலோ
கதர்ச்சுடர் விளக்கு ஒளி கறுத்து எரியுமாலோ
கால முகில் செங்குருதி கால வருமாலோ
வார் முரசு இருந்து வறிதே அதிருமாலோ
வந்து இரவில் இந்திரவில், வானில் இடுமாலோ
ஊர்மனையில் ஊமன்எழு, ஓரி அழுமாலோ
ஓம எரி ஈம எரி போல் கமழுமாலோ
பூவிரியும் மாலைகள் புலால் கமழுமாலோ
பொன்செய் மணி மாலை ஒளி போய் ஒழியுமாலோ
ஓவியம் எலாம் உடல் வியர்ப்ப வருமாலோ
ஊறு புனல் செங்குருதி நாற வருமாலோ

**விளைவு என்ன ஆகும்?**

எனா, உரை முடித்தனை,
‘என்கொல் விளைவு?’ என்றே
வினா உரை தனக்கு எதிர்
விளம்பினள், அணங்கே

**இரு குறிகள் நல்லன!**

உங்கள் குறியும் வடகலிங்கத்து
உள்ள குறியும், உமக்கு அழகே;
நங்கள் கணிதப் பேய் கூறும்
நனவும் கனவும் சொல்லுவோம்!

**பரணிப் போர் உண்டு!**

நிருபர் அணிவென்ற அகளங்கன் மதயானை

நிகளங்களொடு நிற்பன அதற்கு

ஒரு பரணி உண்டு, என உரைத்தன; உரைப்படி

உமக்கு இது கிடைக்கும் எனவே

**களிப்பால் நடித்தன!**

தடித்தனம்! எனத், தலைத் தடித்தனம்! எனப் பல

தனிப்பனை குனிப்ப எனவே,

நடித்தன நடிப்ப, வலியற்றன கொடிற்றையும்

நனைத்தன, உதட்டி னுடனே.

**பசியை மறந்தன:**

விலக்குக, விலக்குக! விளைத்தன! எனக்களி

விளைத்தன இளைத்தன விலா

அலக்கு உக அலக்குஉக அடிக்கடி சிரித்தன

அயர்த்தன பசித்த பசியே

**வயிறு நிரம்பப் போதுமா?**

ஆடி இரைத்து எழு கணங்கள்,

அணங்கே! இக் கலிங்கக் கூழ்

கூடு இரைத்து உண்டுழி,எம்

கூடு ஆரப் போதுமோ?

**ஓட்டிக்கு இரட்டி!**

போதும் போதாது, எனநீர்

புடைப் படலம் இட வேண்டா

ஓதல் சூழ் இலங்கைப் போர்க்கு!

ஓட்டிரட்டி கலிங்கப் போர்!

## ஊ. அபிராமி அந்தாதி – (1 – 5 பாடல்கள்)

**- அபிராமிப்பட்டர்**

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே -1

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்து கொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே -2

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே -3

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே -4

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப் பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே -5